# “உலகம் முழுவதும் வெறுப்பு அதிகரித்து வருகிறது” - ஐ.நா. பொதுச் சபை தலைவர் கவலை



**நியூயார்க்:** உலகம் முழுவதும் வெறுப்பு, வெறுப்பு தொடர்பான பேச்சுகள், குற்றங்கள் ஆகியவை அதிகரித்து வருவதாக ஐ.நா பொதுச்சபையின் தலைவர் டென்னிஸ் பிரான்சிஸ் கவலை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள காணொலிப் பதிவில், “இந்த உலகில் வெறுப்புக்கு இடம் இல்லை. கடந்த அக்டோபர் 7 முதல் (இஸ்ரேல் - ஹமாஸ் தாக்குதல் தொடங்கிய தினம்) உலகம் முழுவதும் வெறுப்பும், வெறுப்பு தொடர்பான பேச்சுகள், குற்றங்கள் ஆகியவை அதிகரித்துள்ளன. இது சந்தேகத்துக்கு இடமின்றி முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

ஆன்லைனிலோ அல்லது ஆஃப்லைனிலோ எந்தவொரு அடிப்படையிலும் பாகுபாடு காட்டப்படுவதை நான் கடுமையாகக் கண்டிக்கிறேன். மேலும் ஒரு நபரின் இனம் அல்லது மதத்தில் வேரூன்றியிருக்கும் அச்சுறுத்தல் அல்லது வன்முறைக்கான தூண்டுதலையும் நிராகரிக்கிறேன்.

‘எல்லா மனிதர்களும் பிறப்பின் அடிப்படையில், சுதந்திரத்திலும் கண்ணியத்திலும் உரிமைகளிலும் சமமானவர்கள்' என்ற மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய பிரகடனத்தின் முதல் வரியை நான் நினைவு கூர்கிறேன்.

வெறுப்புப் பேச்சுகள் வலிமிகுந்த காயங்களை ஆழமாக்குவது மட்டுமின்றி மோதல்களையும், புரிதலின்மைகளையும் தீர்க்கமுடியாது என்கிற அவநம்பிக்கையின் சுழற்சியையும் தூண்டுகிறது. ஆக்கபூர்வமான உரையாடல்களால் மட்டுமே, அனைத்து மக்களிடையே நல்லிணக்கம், பரஸ்பர புரிதல் மற்றும் சகிப்புத்தன்மை ஆகியவற்றை ஏற்படுத்த முடியும்.

எனவே வெறுப்பு மற்றும் வெறுப்புப் பேச்சுக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றுபடுவோம்" இவ்வாறு டென்னிஸ் பிரான்சிஸ் அந்த காணொலியில் தெரிவித்துள்ளார்.

## 2025-க்குள் உலகின் 5 முதன்மை உயிரி உற்பத்தி மையங்களில் ஒன்றாக இந்தியா மாறும்: மத்திய இணை அமைச்சர்



நிகழ்ச்சியில் பேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங்

**புதுடெல்லி:** 2025-ம் ஆண்டுக்குள் உலக அளவில் 5 முதன்மையான உயிரி உற்பத்தி மையங்களில் ஒன்றாக இந்தியா மாறும் என்று மத்திய மத்திய

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

2023 டிசம்பர் 4 முதல் 6 வரை பிரகதி மைதானத்தில் நடைபெற உள்ள உயிரி தொழில்நுட்பம் குறித்த சர்வதேச மெகா கூட்டமான "குளோபல் பயோ-இந்தியா - 2023"-ன் வலைத்தளத்தை தொடங்கி வைத்து ஜிதேந்திர சிங் பேசியது: "இந்தியாவின் ஒட்டுமொத்த பொருளாதாரத்துக்கு பங்களிக்கும் உலகளாவிய வர்த்தகம் மற்றும் உயிரி பொருளாதாரத்தின் ஒரு முக்கிய கருவியாக உயிரி தொழில்நுட்பம் மாறும் ஆற்றலைக் கொண்டுள்ளது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையின் கீழ் கடந்த 9 ஆண்டுகளில் நமது உயிரிப் பொருளாதாரம் ஆண்டுக்கு இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தைக் கண்டுள்ளது. உலகின் முதன்மையான 12 உயிரி தொழில்நுட்ப நாடுகளின் பட்டியலில் இந்தியா இடம் பிடித்துள்ளது.

2014-ஆம் ஆண்டில், இந்தியாவின் உயிரி பொருளாதாரம் சுமார் 10 பில்லியன் டாலராக இருந்தது. இன்று அது 80 பில்லியன் டாலராக உள்ளது. வெறும் 8/9 ஆண்டுகளில் இது 8 மடங்கு அதிகரித்துள்ளது. 2030-க்குள் 300 பில்லியன் டாலரை நாங்கள் எதிர்பார்க்கிறோம். உயிரி பொருளாதாரம் வரும் காலங்களில் மிகப்பெரிய, லாபகரமான வாழ்வாதாரமாக இருக்கும். கடந்த 2014-ம் ஆண்டு 52 ஸ்டார்ட் அப் நிறுவனங்களாக இருந்த பயோடெக் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள், தற்போது 6,300-க்கும் அதிகமாக 100 மடங்கு வளர்ந்துள்ளன.

ஒவ்வொரு நாளும் 3 பயோடெக் ஸ்டார்ட் அப்கள் சாத்தியமான தொழில்நுட்ப தீர்வுகளை வழங்குவதற்கான விருப்பங்களுடன் இந்தியாவில் இணைக்கப்படுகின்றன. அடுத்த 25 ஆண்டுகளில் "அமிர்த கால" இலக்குகளை அடைய அனைத்துத் தொழில்களுக்கும் இடையில் பரந்த ஒருங்கிணைப்பு முக்கியம். முழு அறிவியலும், முழு அரசும், முழு தேசமும் என்பதே இதன் தாரக மந்திரம்" என்று அவர் கூறினார். நிகழ்ச்சியில், உயிரி தொழில்நுட்பத் துறையின் செயலாளர் ராஜேஷ் கோகலே உள்ளிட்டோர் பங்கேற்றனர்.